# 11 பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம்

பெரியபுராணம், அநபாயசோழன் ஆட்சிக் காலத்தில் அவனது முதலமைச்சராக இருந்த உத்தமசோழ பல்லவனால் (சேக்கிழாரால்) சிதம்பரத்திலுள்ள ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து எழுதப்பட்டதாகும். இது திருத்தொண்டர்தொகையை முதனூலாகவும் திருத்தொண்டர்திருவந்தாதியை துணைநூலாகவும் கொண்டு எழுதப்பட்டது. இருகாண்டங்களையும் பதின்மூன்று சருக்கங்களையும் நாலாயிரத்திருநூற்றி ஐம்பத்து மூன்று பாடல்களையும் கொண்டமைந்தது. அதற்கு, **"உலகெலாம் உணர்ந்து"** என இறைவனே அடியெடுத்துக் கொடுத்தார். அப்புராணத்தில் வரும் ஒரு சிறு பகுதியே தடுத்தாட்கொண்ட புராணமாகும்.

**முன் கதைச்சுருக்கம்**

ஆலாலசுந்தரர், திருக்கயிலையிலே, சிவபெருமானுக்கு மலர் பறித்து, மாலைகட்டிப் பணிசெய்து வந்தார். நந்தவனத்தில் உமாதேவியாருக்கு மலர் பறித்த கமலினி, அநிந்திதை என்ற சேடியர் இருவரையும் விரும்பியதனால், அவர் சிவபெருமானிடம் தண்டனை பெறவேண்டியவரானார். எனவே, அவர், தென் தமிழ் நாட்டில் பிறந்து உலக வாழ்க்கையில் ஈடுபடுதல் அவசியமாயிற்று. சிவபெருமான் அவ்வாறு கட்டளையிட்டபோது ஆலாலசுந்தரர் தான் மானிடராகப் பிறந்து பிற ஆகாமிய வினைகளைத் தேட முயலும்போது, தம்மைத் தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று இறைவனை இறைஞ்சினார். அதனைப் பின்வரும் பெரியபுராணப் பாடலடிகள் உணர்த்தும்.

**"செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்**
**மையன் மானுட மாய்மயங் கும்வழி**
**ஐய னேதடுத் தாண்டருள் செய்"**

பூவுலகில் பிறந்து வளர்ந்த சுந்தரருக்குப் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாரின் மகளைத் திருமணஞ்செய்து கொடுப்பதற்கு ஒழுங்குகள் நடைபெற்ற பொழுது, இறைவன் அத்திருமணத்தைத் தடுத்து, சுந்தரரைத் தாம் அடிமையாக்கிக் கொண்டார். பின்னர், பரவையார், சங்கிலியார் என்னும் பெயரில் பூவுலகில் பிறந்து வளர்ந்த மேற்கூறிய சேடியர் இருவரையும் சுந்தரர் மணந்தார். இறைவனின் ஆணை காரணமாக உலகில் பிறந்த சுந்தரர் உலக வழியிற் செல்லாது, அருள் வழியிற் சென்று, எமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குவதற்காக இறைவன் அவரைத் தடுத்தாட்கொண்டார்.

**தடுத்தாட்கொண்ட புராணம்**

**காப்பு**

**திருச்சிற்றம்பலம்**

**உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை:** சிவபெருமான், உலகங்கள் எல்லாவற்றாலும் (அதாவது உலகில் உள்ளவர்களால்) உணர்வதற்கும் ஓதுவதற்கும் அரியவனாய் இருக்கின்றான். அவ்வாறு அரியவன் என்றாலும் தன்னை யாவரும் எளிதிற் கண்டு தரிசித்து உய்ய வேண்டும் என்னும் பெருங்கருணையினால், மூன்றாம் பிறைச்சந்திரன் உலாவுகின்ற, கங்கையைத் தரித்த சடையை உடையவனாய்க் காட்சி அளிக்கின்றான்; அளவில்லாத ஒளி வடிவம் உடையவன்; சிதம்பரத்தில் நடனம் ஆடுபவன். அன்பரின் உள்ளத்தில் மலர்கின்ற, அவனுடைய சிலம்பணிந்த திருவடித் தாமரைகளை நாம் வாழ்த்தி வணங்குவோம்.

**பத விளக்கம்:** **உலகு** - உலகங்கள்; **எல்லாம்** - எல்லாவற்றாலும்; **உணர்ந்து** - உணர்தற்கும்; **ஓதற்கு** - ஓதுதற்கும்; **நிலவு** - மூன்றாம் பிறைச் சந்திரன்; **உலாவிய** - தவழ்கின்ற; **நீர்மலி வேணியன்** - நீர் நிறைந்த கங்கையைத் தரித்த சடையை உடையவன்; **அலகு இல்** - அளவில்லாத; **சோதியன்** - சோதிவடிவம் உடையவன்; **அம்பலம்** - சிற்றம்பலம்; **ஆடுவான்** - ஆனந்த நடனம் ஆடுபவன்; **அடி** - திருவடி; **வாழ்த்தி வணங்குவாம்** - வாழ்த்தி வணங்குவோம்.

**1. ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்த**
**சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்**
**மேலுற வெழுந்துமிகு கீழுற அகழ்ந்து**
**மாலுமிரு வர்க்குமரி யாரொருவர் வந்தார்.**



இலவச விநியோகத்திற்காக

பொழிப்புரை: நாத வடிவாக ஒலிக்கின்ற வேதங்களாற் சூழப்பட்ட கயிலை மலையிலே, ஆலாலசுந்தரர் மீது வைத்த கருணையினாலே, தாம் கொடுத்த திருவாக்கின்படியே, அவருடைய விவாகத்தைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு, சிவபெருமான் வந்தார். அடியவராகிய ஆலாலசுந்தரருக்கு இவ்வளவு எளியவராக வந்த சிவபெருமான், 'நாம் அறிவோம்' என்ற அகந்தையுடன் தேடிய பிரமா, விஷ்ணு ஆகிய இருவரும் அறிதற்கு அரியவராய் முன்பு இருந்தவர். அகந்தை உடையவர்கள் தேவர்களாயினும் அவர்களால் அறியப்படாதவரான அவர் அடியார்களுக்கு எளியவராய் இருக்கின்றார் என்பதனை இங்கு அறியலாம். (நாமும் உண்மை அடியாராக இருந்தால், சிவபெருமான் எமக்கும் வந்து உதவுவார்).

பத விளக்கம்: **ஆலும்** - ஒலிக்கின்ற; **மறை** - வேதம்; **கயிலையின் கண்** - கயிலை மலையிலே; **அருள்** - கருணை; **சாலும்** - கொடுத்த; **மொழியால்** - திருவாக்கின் படியே; **வழிதடுத்து** - தடுத்து; **அடிமை கொள்வான்** - ஆட்கொள்வான்; **மேலுற** - மேலே; **எழுந்தும்** - எழுந்து பறந்தும்; **கீழுற** - நிலத்தின் கீழே; **அகழ்ந்தும்** - அகழ்ந்து சென்றும்; **மாலும்** - மயங்கி நின்ற; **இருவர்க்கும்** - பிரமா, விஷ்ணு ஆகிய இருவருக்கும்; **அரியார் ஒருவர்** - ஒப்பற்றவர்; தமக்கு உவமை இல்லாதவர்; **வந்தார்** - அறிதற்கு அரியவராகிய ஒருவர் வந்தார்.

2. **கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மெனச்சூழ்**
**புண்ணிய நுதற்புனித நீறுபொலி வெய்தத்**
**தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மாடே**
**வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க.**

பொழிப்புரை: சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணை மறைக்கச் சுற்றிய வெள்ளைத் துணி போல, நெற்றியிலே தூய வெண்ணீறு துலங்கவும் குளிர்ச்சியான பிறைச்சந்திரன் முதிர்ந்து கதிர் சாய்ந்த தன்மை போல, வெண்மையான நரைமயிர் முடிப்பு கழுத்திடையில் விழுந்து அசையவும்.

பத விளக்கம்: **கண் இடை** - இரு கண்களுக்கும் இடையிலுள்ள நெற்றிக் கண்; **கரந்த** - மறைத்த; **கதிர் வெண்படம்** - ஒளி பொருந்திய வெண்துகில்; **சூழ்** - சூழ்ந்த; **நுதல்** - நெற்றி; **தண்மதி** - குளிர்ந்த பிறைச்சந்திரன்; **மாடு** - பக்கம்; **வெள்நரை** - நரைமயிர்; **படம்** - துணி; சழங்கல் - அசைதல்.

3. **காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்**
**சோதிமணி மார்பின்மிசை நூலினொடு தோளின்**
**மீதுபுனை யுத்தரிய வெண்டுகி னுடங்க**
**ஆதப மறைக்குடை யணிக்கரம் விளங்க.**

பொழிப்புரை: காதில் அணிந்த உருத்திராக்க மணியானது வடமாக அமையவும் தொங்கிய தோடு தாழ்ந்து விளங்கவும், ஒளி பொருந்திய மார்பின் மேலே அணிந்த பூணூலுடன், தோளின் மேல் உத்தரியமாக அணிந்த வெண்ணிறத் துணியும் சேர்ந்து அசையவும், கையிலே வெயிலை மறைக்கும் வேதமாகிய குடை விளங்கவும்.

பத விளக்கம் : **காதிலணி** - காதில் அணிந்த; **தாழ** - தாழ்ந்து விளங்க; **சோதி** - ஒளி; **மார்பின் மிசை** - மார்பின் மேலே; **நூல்** - பூணூல்; **வெண்டுகினுடங்க** - வெண்ணிறத்துணி; **கண்டிகை** - உருத்திராக்க மாலை; **குழை** - குண்டலம் (ஆண்கள் அணியும் தோடு); **ஆதபம்** - வெயில்; **அணி** - அழகு; **அணிக்கரம்** - அழகிய கை; **நுடங்கல்** - அசைதல்.

4. **மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ**
**அத்தகைய மூப்பெனு மதன்படிவ மேயோ**
**மெய்த்தநெறி வைதிகம் விளைத்தமுத லேயோ**
**இத்தகைய வேடமென வையமுற வெய்தி.**

பொழிப்புரை: இவ்வாறு கொண்ட திருவேடமானது, செறிந்து வளர்கின்ற பேரழகே முதிர்ந்து மூப்பாகிய வடிவமோ, அல்லது அவ்வாறுள்ள மூப்பின் உண்மையான உருவமோ; அல்லது மெய்யான வைதீக நெறியை உலகில் விளைவித்த மூலப் பொருளோ என்று அங்கு அவரைக் கண்டார் யாவரும் ஐயம் கொள்ளும் வகையில் வந்து. (மேலும் அழகாகிய தோற்றம் சிவபெருமானுக்கு இங்கு கூறப்படுகின்றது.)

பத விளக்கம்: **வேடம்** - திருவேடம்; **மொய்த்து** - செறிந்து; **படிவம்** - உருவம்; **மெய்** - உண்மை; **ஐயம் எய்தி** - சந்தேகம் கொள்ளுமாறு.



இலவச விநியோகத்திற்காக

5. வந்துதிரு மாமறை மணத்தொழி றொடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்று
இந்தமொழி கேண்மினெதிர் யாவர்களுமென்றான்
முந்தைமறை யாயிர மொழிந்ததிரு வாயான்.

**பொழிப்புரை:** (நான்காவது பாட்டிற் கூறியவாறு) வந்து, வேத மந்திரங்களுடன் ஆகம முறைப்படி திருமண முயற்சிகள் நடக்கும் பந்தரிலே, நம்பியாரூரருக்கு எதிராக வழக்குச் சொல்லப் போகும் சபை முன்னே நின்றுகொண்டு, பழமையாகிய அளவில்லாத வேதங்களைச் சொல்லிய வாயினையுடைய சிவபெருமான், 'யாவரும் நான் சொல்லப் போகின்ற இந்த மொழிகளைக் கேளுங்கள்' என்று கூறினார்.

**பத விளக்கம்:** **திருமாமறை** - வேதம்; **பந்தரிடை** - பந்தரிலே; **நம்பி** - நம்பியாரூரர்; **எதிர்** - எதிராக; **பன்னுதல்** - சொல்லுதல்; **முந்தை** - பழமை; **மொழிந்த** - சொல்லிய.

6. 'ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ' தென்றான்
தேவரையு மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான்.

**பொழிப்புரை:** (முதிய வேதியர், எமக்கு நாவலூர் நம்பியொடு வழக்கு ஒன்று உள்ளது என்று கூறவே, அதனை முற்றாகக் கூறும்படி நாவலூர் நம்பி கேட்க) 'நான் சொல்லுவது இதுதான்; மறையோர்களே, இதனைக் கேளுங்கள்; இந்த நாவலூர் நம்பி என் அடிமையாவான்; இதுவே நான் சொல்ல வந்த வழக்கு' என்று, திருமால், பிரமா ஆகியோர் தொடக்கம், பெரும்பேறு பெற்றவர்கள் எல்லோரையுந் தனித்தனியே தம் அடிமைகளாகக் கொண்டவரான சிவபெருமான் கூறினார்.

**பத விளக்கம்:** **ஆவதிது** - நான் சொல்லுவதாவது; **மறையோர்** - அந்தணர்கள்; **கேண்மின்** - கேளுங்கள்; **அடியான்** - அடிமையாவன்; **இந்நாவனகரூரன்** - இந்த நாவலூர் நம்பி; **இது** - இதுவே; **மொழிவது** - சொல்ல வந்த வழக்கு; **அயன்** - திருமால்; **முதல்** - தொடக்கம்.

7. என்றானிறையோ னதுகேட்டவ ரெம்ம ருங்கும்
நின்றா ரிருந்தா ரிவனென்னினைந் தான்கொ லென்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார்திரு நாவலூரர்
நன்றான் மறையோன் மொழி யென்றெதிர் நோக்கி நக்கார்.

**பொழிப்புரை:** 'நாவலூரர் தம் அடிமை' என்று வேதியராக வந்த சிவபெருமான் கூறியதைக் கேட்டவர்கள் எல்லோரும், மணப்பந்தலில் எங்கும் நின்றவர்களும் இருந்தவர்களும், "இவர் என்ன நினைத்து இவ்வாறு சொன்னார்" என்று அவர் பக்கத்திற் சென்றவர்களும் சினந்தவர்களும் சிரித்தவர்களுமாகத் திகைப்படைந்தார்கள். அப்பொழுது நாவலூர் நம்பியார் 'இம்மறையோன் மொழி நன்றாயிருக்கின்றது' என்று கூறி, அவர் எதிரே நின்று இகழ்ச்சி தோன்றச் சிரித்தார்.

**பத விளக்கம்:** **இறையோன்** - சிவபெருமான்; **மருங்கு** - எங்கும், பக்கம்; **வெகுளுதல்** - சினத்தல்; **கொல்** - ஐயக் குறிப்பு; 'நன்று' என்ற இகழ்ச்சிக் கூற்று 'நன்றன்று' என்ற எதிர்மறைப் பொருளைக் கொடுக்கின்றது.

8. நக்கார் முகநோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரியத்துகி றாங்கி மேற்சென்று
அக்காலமுன் றந்தைதன் றந்தையா ளோலை யீதால்,
இக்காரி யத்தைநீ யின்று சிரித்ததென் னேடவென்ன.

**பொழிப்பு:** ஏழாவது பாட்டிலே கூறியவாறு முதிய வேதியரின் எதிரே நின்று இகழ்ச்சி தோன்றச் சிரித்த நம்பியாரூரரின் முகத்தை நேரே பார்த்து, எல்லோர்க்கும் மேலான கடவுள் (வேதியர்) நடுங்கித் தள்ளாடிக் கொண்டு, கீழே சரிந்த உத்தரியத்தை எடுத்துப் போட்டுக் கொண்டு, அவருக்கு அண்மையிற் சென்று, 'இதோ! அந்நாளிலே உன் பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமை ஓலை என்னிடம் உள்ளது. எனவே, இன்று நான் சொன்ன இக்காரியத்தை நீ இகழ்ந்து சிரித்தது என்ன? ஏடா' என்று சொல்ல.

**பத விளக்கம்:** **நோக்கி** - நேரே பார்த்து; **நக்கார்** - ஏளனமாகச் சிரித்தவர்; **நுடங்குதல்** - தள்ளாடுதல்; **யார்க்கும் மிக்கான்** - மகா சங்கார காலத்தில் யாவையும் ஒடுங்கவும் தான் மிகுந்து நிற்பவன்; அதாவது எல்லார்க்கும் மிகுந்தவன்; எல்லார்க்கும் மேலான இறைவன் என்பதும் பொருந்தும். **அக்காலம்** - இன்னதென அறியப்படாத


இலவச விநியோகத்திற்காக

அநாதிகாலம், **ஏட** - அடிமைகளை அழைக்கும் விளிச்சொல்; **உத்தரியம்** - மேற்போர்வை; **ஆள் ஓலை** - அடிமை ஓலை; **தந்தை தன் தந்தை** - பாட்டன்; **காரியம்** - காரணத்தால் நிகழ்வது.

9. மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாற் சிரிப்பு நீக்கி
ஆசிலந் தணர்கள் வேறோ ரந்தணர்க் கடிமை யாதல்
பேசவின் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோ னென்றார்.

**பொழிப்புரை:** உன்னுடைய பாட்டனார் எழுதிக் கொடுத்த அடிமை ஓலை என்னிடம் உள்ளதென முதியவேதியர் கூறிய பொழுது, குற்றமற்ற சிவவேதியர் குலத்திலே பிறந்த நம்பிகள் நேரே அவருடைய முகத்தைப் பார்த்தார். அப்பொழுது, முற்பிறப்புக்களிலிருந்து தொடர்ந்து வந்த அன்பு மனத்திற் பதிந்து கிடந்த காரணத்தாற் சிறிது சிந்தை நெகிழ, இகழ்ச்சிச் சிரிப்பு நீங்கியது. அப்பொழுது அவர், "குற்றம் இல்லாத சிவவேதியர், வேறொரு வேதியருக்கு அடிமையாவர் என்று இன்று நீர் சொல்லக் கேட்டோம். இதுவரை ஒருவரும் அவ்வாறு கூறியதில்லை. ஆகையால், நீர் பித்தனோ?" என்று கேட்டார்.

**பத விளக்கம்:** **சிந்தை** - உள்ளம்; **மாசு** - பாசம்; **மாசிலா** - குற்றமில்லாத : ஆன்மாக்களின் பாசத்தைப் போக்கச் சிவபூசையை மரபுத் தொழிலாகக் கொண்டதும் வேறு தொழில் செய்யாததுமான ஆதி சைவ மரபு. எனவே, உயிர்களுக்குப் பாசத்தை இல்லாமற் செய்யும் மரபு. இந்த மரபினர் மட்டுமே பரார்த்த சிவபூசைக்கு உரியவர்கள் என்று ஆகமநூல் கூறும். **ஆசு** - குற்றம்.

10. பித்தனு மாகப் பின்னும் பேயனு மாக நீயின்று
எத்தனை தீங்கு சொன்னா யாதுமற் றவற்றா னாணேன்
அத்தனைக் கென்னை யொன்று மறிந்திலை யாகி னின்று
வித்தகம் பேசவேண்டாம் பணிசெய வேண்டுமென்றார்.

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை:** அது கேட்ட வேதியர், 'நீ சொல்லியது போல, நான் பித்தனானாலும் சரி; அதனோடு பேயனானாலும் சரி; இன்று நீ இன்னும் இவ்வாறு எவ்வளவு தீய மொழிகளைச் சொன்ன போதிலும் நான் அவற்றினால் வெட்கமடைந்து நிற்கமாட்டேன். இவ்வளவுக்கும் நீ என் தன்மை ஒன்றுந் தெரிந்து கொள்ளவில்லையானால், இங்கு நின்று கேலிப் பேச்சுப் பேச வேண்டாம்; யான் இட்ட பணி செய்ய வேண்டும்' என்று கூறினார்.

**பத விளக்கம்:** **பித்தன்** - பித்துப் பிடித்தவன்; **ஆக** - சரி; **பேயன்** - பேயாற் பீடிக்கப்பட்டவன்; **தீங்கு** - தீயசொல்; **யாதும்** - சிறிதும்; **நாணுதல்** - வெட்கமடைதல்; **அத்தனைக்கு** - இவ்வளவுக்கும்; **வித்தகம்** - கேலி, கெட்டித்தனமான பேச்சு.

## 01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இறைவன் ஏன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டார்?
2. தடுத்தாட் கொண்டபுராணம் யாரால் பாடப்பட்டது? அது எத்தனையாந் திருமுறையில் அடங்கும்?

## செயற்பாடு

1. சுந்தரரை "யான் இட்டபணி செய்யவேண்டும்..." என்று இறைவன் கட்டளை இட்டார். அதன்பின் நடந்தவற்றை நூலாதாரங்களுடன் தேடித் தொகுத்து காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- சுந்தரர் திருக்கயிலையில் செய்த தவறுக்காகப் பூவுலகில் தண்டனையைப் பெற்றார்.
- சுந்தரரின் வேண்டுகோளுக்கு இணங்க, இறைவன் அவரைத் தடுத்தாட் கொண்டார்.
- இறைவன் பேரருளாளன்; அடியவர்களுக்கு எளியவன்; அகந்தை உடையோரால் அறிய முடியாதவன்.
- சுந்தரர் பொருட்டு, இறைவன் கிழவேதியராக வந்தார்.



இலவச விநியோகத்திற்காக